பக்கங்கள் 15+ 02

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 10 வியாக்கிழமை 25.12.2025 | அதிர்வு 148

## மீண்டும் கொழும்பில் குடியேறிய மஹிந்த!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவ ரான முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் கொழும் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ரணில் - சஜித் மிக விரைவில் நேரில் சந்திப்பு

## இரு கட்சிகளினதும் ஒன்றிணைவு தொடர்பில் இறுதி முடிவு எடுக்க

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் மிக விரைவில் நேரடிச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்து பயணிப்பது தொடர்பில் இறுதி 02

# கணக்காய்வாளர் நாயகம் இன்றி இயங்கும் நாடு

## பாரதூரமான நிலையைச் சுட்டிக்காட்டி ஜனாதிபதிக்கு ஹர்ஷ அவசர கடிதம்



கணக்காய்வாளர் நாயகம் இன்றி நாடு இயங்கி வரும் பாரதூரமான நிலையைச் சுட்டிக்காட்டி, கோப் குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடித்தில் நாட்டில் நிலவும் தற்போதைய பேரிடர் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி 6 முக்கிய விடயங்களை உள்ளடக்கிய கடிதத்தை ஜனாதிபதிக்கு அவர் சமர்ப்பித்துள்ளார்.

"டித்வா" சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களைப் புனரமைக்கும் 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## கண்டி மாவட்டத்தில்

# மண்சரிவு அபாயத்தால் ஐந்து கிராமங்கள் ஆள் நடமாட்டமற்ற வலயங்களாக அறிவிப்பு

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட கடும் மழையைத் தொடர்ந்து, கண்டி மாவட்டத்தின் ஹசலக்க நகரை ஒட்டியுள்ள பமுனுபுர பிரதேசத்தின் ஐந்து கிராமங்களை அரசு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஆள் நடமாட்டமற்ற வலயங்களாக அறிவித்துள்ளது.

மண்சரிவு காரணமாக இந்தப் பகுதிகளில் நிலம் சுமார் 40 அடி ஆழம் வரை உள்வாங்கியுள்ளதால், மனிதக் குடியேற்றங்களுக்கு இவை பாதுகாப்பற்றவை எனக் கருதப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவின் உதவிப் பணிப்பாளர் எல்.ஏ.கே.ரணவீர தெரிவித்தார்.

உதத்தாவ, நெலும் மல, கல நக, மெத கெலே மற்றும் உட கல் தெபொக்காவ ஆகிய கிராமங்களே இவ்வாறு தடைசெய்யப்பட்ட வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் உதத்தாவ கிராமத்தில் மாத்திரம் 12 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணோடு மண்ணாகப் புதையுண்டுள்ளதுடன், இதுவரை 26 பேரின்



சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும், பெருமளவிலான உடல்கள் 30 முதல் 40 அடி ஆழத்தில் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதால், காணாமல்போனவர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாக உறுதிப்படுத்த முடியவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக மீட்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிரி கருணாவர்தன கருத்துத் தெரிவிக்கையில், அதிக அபாயம் உள்ளதாகக் கண்டறியப்பட்ட இந்தப் பகுதிகளில் மீண்டும் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது 3 டி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதிர்கால மண்சரிவு அபாயங்களை மதிப்பிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரங்கிகா ஹல்வதுர தலைமையிலான குழுவினர் யஹங்கல மலைப்பகுதியில் நடத்திய ஆய்வில், சட்டவிரோத புதையல் வேட்டைக்காக அங்கு இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டதும், பாறைகள் துளையிடப்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பலத்த அதிர்வலைகள் மலையின் கட்டமைப்பைப் பலவீனப்படுத்தியதே இந்தப் பாரிய மண்சரிவுக்கு முக்கிய காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விரிவான அறிக்கை மினிப்பே பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் அதிரடி வேட்டையில் நாடு முழுவதிலும் பலர் கைது!

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் நேற்று புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 29 ஆயிரத்து 727 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 597 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 25 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 218 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 136 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 136 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 36 பேரும் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர். அத்துடன், பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 795 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரணில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை எடுக்கும் வகையிலேயே இதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு கட்சிகளிலும் உள்ள மூத்த உறுப்பினர்களின் தலையீட்டையடுத்தே நேரடிச் சந்திப்புக்குரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இணைந்து பயணிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக இரு கட்சிகளில் இருந்தும் பேச்சு குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அந்தக் குழுக்கள் சந்தித்துப் பல தடவைகள் பேச்சு நடத்தின. இணைந்து பயணிக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டாலும் தனிக்கட்சியாக இணைவதா அல்லது கூட்டணியாகச் செல்வதா என்பது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அக்கட்சியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸ பெற வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுக் கூட்டணியாக ரணிலும், சஜித்தும் இணைத் தலைமை பதவி வகிக்க வேண்டும் என்ற மற்றுமொரு யோசனையும் உள்ளது.

"சஜித் தலைவர், ரணில் உயர்மட்ட ஆலோசனை தலைவர்" என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்த விவகாரம் தொடர்பில் இறுதியான – உறுதியான முடிவை எடுப்பதற்காக இரு கட்சிகளினதும் தலைவர்களை மிக விரைவில் நேரடியாகச் சந்திக்க வைப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் குடியேறியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

நுகேகொடை, மிரியான பகுதியிலேயே அவர் குடியேறியுள்ளார் என்று சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் நடவடிக்கை, இராஜதந்திர சந்திப்புகள் மற்றும் மருத்துவ சிகிச்சை என்பவற்றைக் கருதியே மஹிந்த மீண்டும் கொழும்பு வந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

கொழும்பு, 7 விஜேராம மாவத்தையிலுள்ள அரசின் உத்தியோகபூர்வ வதிவிடத்திலேயே மஹிந்த தங்கி வந்தார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்கும் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து மஹிந்த வெளியேறினார்.

தங்காலையில் உள்ள தமது பூர்வீக இல்லமான கால்டன் இல்லத்துக்கு மஹிந்த சென்றிருந்தார்.

மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் நாளாந்தம் அவரைச் சந்திக்க வருவது தொடர்பான செய்திகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெளியிட்டு வந்தது.

இந்நிலையிலேயே அவர் கொழும்பு வந்துள்ளார். நுகேகொடை – மிரியான பகுதியிலேயே கோட்டாபய ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளும் அமைந்துள்ளன.



# விசேட போதைப்பொருள் ஒழிப்பு: நேற்று 649 சந்தேகநபர்கள் கைது!

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நாடு முழுவதும் போதைப்பொருளைத் தடுக்கும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுடன், இலங்கை பொலிஸாரினால் மேற்கொள்ளப் பட்டுவரும் தொடர்ச்சியான, போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது பலர் கைது செய்யப்பட்டுள்ள துடன், அவர்களிடமிருந்து போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள் ளன.

அதன்படி, நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக் கைகளுக்கமைய, 22 கிலோகிராம் 486 கிராம் ஹெரோயின், 172 கிலோ கிராம் 572 கிராம் ஐஸ், 02 கிலோகிராம் 616 கிராம் கஞ்சா, 12,734 கஞ்சா செடிகள், 01 கிராம் குஷ்ரக போதைப் பொருள், 08 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1039 போதை மாத் திரைகள், 11 கிராம் 200 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 1 கிலோகிராம் 301 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேநேரம், இந்தப்போதைப்பொருட் களுடன் தொடர்புடைய 649 சந்தேக நபர்கள் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 653 சோதனைகள் நடத் தப்பட்டுள்ளதுடன், 9 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.



# கொழும்பில் துப்பாக்கியுடன் வயோதிபர் ஒருவர் சிக்கினார்

ரி – 56 ரக துப்பாக்கியுடன் வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் கொழும்பு – கிராண்ட்பாஸ் ஜோசப் வீதி பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு கைது செய்யப் பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ரி – 56 ரக துப்பாக்கி மற்றும் 27 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கொழும்பு 14 ஐச் சேர்ந்த 67 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் பஸ் மோதி பெண் ஒருவர் மரணம்!



தனியார் பஸ் மோதி பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து எஹெலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்தினபுரி – அவிசாவளை வீதியின் மஹிங்கொட பகுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரியில் இருந்து அவிசாவளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் எதிர்த்திசையில் வந்த தனியார் பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் குழந்தையொன்றும் பலத்த காயமடைந்து, எஹெலியகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர் 30 வயதுடைய பெண் எனவும், அவர் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

சடலம் எஹெலியகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ்ஸின் சாரதியைக் கைது செய்துள்ள எஹெலியகொட பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# திருமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் விபத்து!

## 14 பேர் காயமடைந்து வைத்தியசாலையில்

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவில் உள்ள மஹிந்தபுர சந்தியில் வைத்து பஸ் விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்துள்ளனர் என்று சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியில் இன்று வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றில் இருந்து திருகோணமலைக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மூதூர் தள வைத்தியசாலை மற்றும் சேருநுவர பிரதேச வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆழிப்பேரலை இடம்பெற்று 21 வருடங்கள் நினைவு நிகழ்வுகள் வடமராட்சி கிழக்கில்!

**(வடமராட்சி விசேட நிருபர்)**

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் யாழ். மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோரை காவு கொண்ட வடமராட்சி கிழக்கில் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.05 மணியளவில் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் பிரதான நிகழ்வு நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆழிப்பேரலை அனர்தத்தில் சுமார் 1200 பேர் காவு கொள்ளப்பட்டனர். இவர்களில் 880 பேர் உடுத்துறை நினைவேந்தல் ஆலயத்திலும் 72 பேர் மணற்காட்டிலும் சுமார் 50 பேர் உடுத்துறை பத்தாம் கட்டையிலும் மற்றும் பலர் வெற்றிலைக்கேணி தாளையடி ஆகிய இடங்களிலும் அடக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் 880 பேரில் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தன. இவர்கள் நினைவாக வெளிநாட்டில் உள்ளவர்களின் உதவியுடன் தனித்தனி நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டுள்ளன. காவு கொள்ளப்பட்ட 1200 பேரில் பருத்தித்துறை, வடமராட்சி பிரிவை சேர்ந்த 14 பேரும் அடங்குவர்.உடுத்துறையில் நடைபெறும் நினை வேந்தலில் ஒவ்வொருவரதும் தூபிக ளுக்கு முன்னால் உற்றார், உறவினர்கள் அவர்களுக்கு பிடித்த உணவுப் பண்டங் களை படைத்து அஞ்சலி செலுத்துவார். இந்த நிகழ்வை வழமை போல் உடுத் துறை கடற்றொழிலாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## பாரதூரமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளுக்காகத் தற்போது பெருமளவிலான நிதிப் பரிமாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான பாரிய நிதி நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும், அரசமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் கணக்காய்வாளர் நாயகத்தின் பதவி வெற்றிடமாக இருப்பது பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் "எக்ஸ்" சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள ஹர்ஷ டி சில்வா எம்.பி., "தற்போதைய இக்கட்டான நிலையில் நிதி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இந்த நியமனம் மிக முக்கியமானது." – என்று வலியுறுத்தியுள்ளார்.

# கொழும்பில் ஐஸ் போதைப்பொருளுடன் 5 இளைஞர்கள் வசமாகச் சிக்கினார்கள்!

## அவர்களிடமிருந்து இரண்டு கத்திகளும் மீட்பு

கொழும்பு - கறுவாத்தோட்டத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை மற்றும் கறுவாத்தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு கைது செய்யப்பட்ட அவர்களிடமிருந்து 2 கத்திகளும் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி இளைஞர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







# புளியங்குளம் பகுதி மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி!

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்கு பிரதேச செயலக நிர்வாகத்தில் உள்ள, புளியங்குளம் முத்துமாரிநகர், பரமகுளம் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு, யாழ்ப்பாணம், தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நேற்று புதன் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எழுகை அறிவாலயத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக சென்று உதவிகளை வழங்கி வைத்தார்.





# மூதூர் வலயப் பாடசாலைகளுக்கு மட்டு. வலய அதிகாரிகள் விஜயம்

(எம்.எம்.நௌபீக், தோப்பூர்)

மூதூர் வலயத்தைச் சேர்ந்த சிறப்பான செயற்பாடுகளை வெளிக்காட்டும் முன்மாதிரியான பாடசாலைகளை மட்டக்களப்பு வலய அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் 60 பேர் களப்பயணம் மேற்கொண்டு நேற்று பார்வையிட்டனர்.

மூதூரில் காணப்படும் மிக வேகமாக முன்னேறிவரும் மாதிரி பாடசாலையான அஷ்ரப் வித்தியாலயம் மற்றும் ஈச்சிலம்பற்று இலங்கை துறைமுகத்துவாரம் கனிஷ்ட பாடசாலை ஆகிய பாடசாலைகளை பார்வையிட களவிஜயம் மேற்கொண்டனர்.

நிகழ்வில் மூதூர் வலயத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டு இவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மௌனத்தின் சந்தேகம்

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்' என்றான் திருநாப் போதகன் வள்ளுவப் பெருந்தகை.

இயேசு கிறிஸ்து அவதரித்த கிறிஸ்மஸ் தினத்தை இன்று கொண்டாடும் நாங்கள், அதே பாணியில் இயேசு போதித்தமையையும் நினைவு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மரணத்தின் வாயிலிலும் சத்தியத்தைக் கடைப்பிடித்த தேவ சுதன் இயேசு, இறுதி நிமிடத்திலும் கூட தன்னை இன்னலுக்கு ஆளாக்கியவர்களை மன்னிக்கச் சொல்லி தம் தந்தையிடம் பிரார்த்தித்த இணையில்லா அன்பு வடிவத்தினர்.

தமிழ்மறை தந்த வள்ளுவனும், திருமறை காட்டிய இயேசுவும் போதித்த வழியில் குற்றம் இழைத்தவர்களை மன்னித்து சமூகம் முன்நகர முடியுமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

நாட்டில் சுமார் 260 பேரைப் பலி கொண்டு ஐந்நூறுக்கும் மேற்பட்டோருக்கு அவயப் பாதிப்புகளை ஏற்படுத்திய ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் இடம்பெற்று ஆறரை ஆண்டுகள் கடந்துவிட்டன.

'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்போம்' என்று சூளுரைத்து, வாக்குறுதி கொடுத்த அநுரகுமார திஸநாயக்கவின் ஆட்சி ஓராண்டையும் தாண்டி நகருகின்றது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல்களின் சூத்திரதாரிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அந்தத் தாக்குதல் நினைவு தினத்துக்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பெரும் போராட்டம் வெடிக்கும் என்று கடந்த நினைவு தினத்துக்கு முன்னர் ஆக்ரோஷமாக எச்சரிக்கை அறிவிப்பை விடுத்த கிறிஸ்தவ மதத் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இப்போது அது விடயத்தில் அதீத அமைதி பேணுகிறார். அடக்கி வாசிக்கின்றார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும், கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித்தும் இன்றைய கிறிஸ்மஸ் தினத்தையொட்டி மக்களுக்கு விடுத்த செய்தியில் ஈஸ்டர் ஞாயிறு விவகாரத்தை ஒட்டி ஓர் அம்சடக்கமான அமைதி பேணுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இதோ சூத்திரதாரிகளைப் பிடித்து நடவடிக்கை எடுக்கிறோம் என்று ஆரவாரம் பண்ணிய அநுரகுமார அரசு அந்தக் குண்டு வெடிப்பு சமயமும் பின்னரும் சிறையில் இருந்து கொண்டிருந்த முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானைப் பின்னர் கைது செய்து, 'செல்லும் செல்லாததெல்லாம் செட்டியார் தலை மீது...!' என்பது போல ஈஸ்டர் ஞயிறு குண்டுத் தாக்குதல் விவகாரத்தை அரசியல் ரீதியாக அவர் மீது சுமத்தி விட்டு அம்சடக்கமாக அரசியல் செய்கின்றது.

நாட்டுக்குப் பேரழிவை ஏற்படுத்திய அந்தத் தாக்குதலின் பின்புலத்தில் அரசியல் நோக்கங்கள், இலக்குகள், காய் நகர்த்தல்கள் இருந்திருக்கின்றன என்று கூறப்படும் பின்னணியில், இது விடயத்தில் தீர்க்கமாக நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறி அதிகாரத்துக்கு வந்த இப்போதைய அரசு தரப்பும், சம்பந்தப்பட்ட மதத் தரப்பும் இப்போது நம்பவே முடியாத ஓர் அமானுஷ்ய அமைதியைப் பேணுகின்றமை ஏன் என்பது புரியவில்லை.

வான் புகழ் கொண்ட வள்ளுவன் கூறிய வழியிலோ அல்லது பிதா சுதன் இயேசு காட்டிய உபதேசப்படியோ தவறிழைத்தவர்களை மன்னித்து, தாண்டிப் போகும் பக்குவ நிலையை - முடிவை - இந்த அரசும் அதற்கு முண்டு கொடுத்துத் தாங்கிப் பிடிக்கும் கர்தினால் மல்கம் ரஞ்சித் போன்றவர்களும் எடுத்து விட்டார்களா என்று கேள்விதான் இந்த மௌனத்தின் சந்தேகமாக இப்போது எழுகிறது.



# வல்வெட்டித்துறை நகரசபையின் பிரதேசங்களில் டெங்கு கட்டுப்பாட்டு விசேட சோதனை நடவடிக்கை

வல்வெட்டித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு கட்டுப்பாட்டு விசேட சோதனை நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 133 இடங்களில் டெங்கு நுளம்பு பரவும் ஏதுநிலை காணப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 15 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் 13 குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த சோதனையில் வல்வெட்டித்துறை நகரசபையினர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர் இணைந்து வீடுகள் தோறும் களத்தரிசிப்பு



மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது 514 ஆதனங்கள் பரிசோதிக்கப்பட்டதில் 133 இடங்கள் நுளம்பு பரவக்கூடிய சூழலாக இனங் காணப்பட்டதுடன். 15 ஆதன உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது.

அத்துடன். நுளம்பு குடம்பிகளுடன் சுற்றாடலினை பேணிய 13 குடியிருப்பாளர்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





# தையிட்டி அராஜக சம்பவத்துக்கு பருத்தித்துறை நகரசபை கண்டனம்

சட்டவிரோத தையிட்டி விகாரைக்கு எதிரான ஜனநாயக வழிமுறை போராட்டத்தின் போது பொலிஸார் மேற்கொண்ட அராஜகமான செயற்பாட்டிற்கு பருத்தித்துறை நகரசபை வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் விசேட அமர்வு நேற்று (24) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நகரபிதா வின்சென்ட் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றிருந்தது.

மாதாந்த மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான இறுதி சபை அமர்வுமாக இடம்பெற்ற இவ்விசேட அமர்வின் போது நகர சபை செயற்பாடுகள், திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

இன்போது கடந்த 21 ஆம் திகதி தையிட்டி சம்பவம் தொடர்பில் நகரசபை





கண்டனத்தை பதிவு செய்வது தொடர்பில் நகரபிதா முன்வைத்த கோரிக்கை சபையில் உள்ளவர்களது எதிர்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

சபை அமர்வின் பின்னர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல்,

“சட்டவிரோத தையிட்டி விகாரைக்கு எதிராக வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஜனநாயக முறையிலான ஆர்ப்பாட்ட பேரணியின் போது பொலிஸாரினால் சைவ சமய மதகுருவான தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்பட்ட இப்போராட்டத்தில் பங்கேற்றவர்களை பொலிஸார் கைது செய்த விதம் அடக்குமுறையின் வெளிப்பாடாகும். பொலிஸாரின் இந்த அராஜகமான செயற்பாட்டிற்கு பருத்தித்துறை நகரசபை வன்மையான கண்டனத்தை பதிவு செய்கிறது.““ என தெரிவித்தார்.



# மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி நியமனம்

**(பூ.லின்ரன்)**

மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்குப் புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக ஹெலும் பண்டார மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நீண்ட நாள்களாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தர பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் நிரந்தர அதிகாரி இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# முன்னாள் ஹொங்கொங் கிரிக்கெட் வீரரின் சாதனை ஓட்டம் பருத்தித்துறையில் ஆரம்பம்

ஹொங்கொங் 19 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், மெல்போர்னில் உடற்பயிற்சி உடலியல் நிபுணராகப் பணியாற்றுபவருமான 24 வயதுடைய ராகுல் சர்மா, சிறுவர் புற்று நோய் ஆராய்ச்சி நிதிக்காக இலங்கையின் வடக்கு முனையிலிருந்து தெற்கு முனை வரையிலான சாதனை ஓட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

ராகுல் சர்மா தனது ஓட்டத்தை நேற்று பருத்தித்துறை சுப்பர்மடம் கொடிக் கம்பத்தில் இருந்து ஆரம்பித்தார்.

அவர் எதிர்வரும் 30 ஆம் திகதி தென் முனையான தேவேந்திரமுனையை சென்றடையத் திட்டமிட்டுள்ளார்.

சுமார் 574 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்தப் பயணத்தை 07 நாள்களில் கடக்கவுள்ள அவர், நாளொன்றில் சராசரியாக 100 கிலோ மீற்றர் தூரம் ஓடவுள்ளார்.

சிறுவர் புற்றுநோயைக் குணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சிட்னியைத் தளமாகக் கொண்டு இயங்கும் “சிறுவர் புற்றுநோய் நிறுவனம்“ என்ற அமைப்புக்காகக் குறைந்தது 20,000 அவுஸ்திரேலிய டொலர்களை (சுமார் 13,052 அமெரிக்க டொலர்கள்) திரட்டுவதே இவரது இலக்காகும்.

இதற்காக அவர் கடந்த 18 ஆம் திகதி இலங்கை வந்துள்ளார்.

இந்தியப் பிரஜையான ராகுல் சர்மா,ஹொங்கொங்கில் வளர்ந்ததுடன் 10 வயதில் கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய அவர், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஹொங்கொங் 19 வயதுக்குட்பட்டோர் அணிக்காக விளையாடியுள்ளார்.

விளையாட்டின் மீதான தனது ஆர்வத்தையும் சமூக சேவையையும் இணைக்கும் வகையில் இந்தச் சவாலை அவர் முன்னெடுத்துள்ளார்.




# அனர்த்த காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உறுப்பினருக்குக் கௌரவம்!

(அபு அலா)

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் நிர்வாக சபைக் கூட்டம் அட்டாளைச்சேனை ஒஸ்ரா மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், சிரேஷ்ட ஊடகவியலாளர் உட்பட சமூக ஊடகங்களின் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.ஐ.எம்.றியாஸ் வெள்ளப்பெருக்கு காலப் பகுதியில் பல்வேறுபட்ட பணிகளை அர்ப்பணிப்புடன் செய்தார் என்பதைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# நெடுந்தீவின் வரலாற்றுச் சிறப்பம்சமாக விளங்குகின்றன பெருக்க மரங்கள்...!

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தென் மேற்கில் அமைந்துள்ள ஏழு தீவுகளில் ஒன்றே நெடுந்தீவு ஆகும். இத்தீவின் பெயருக்கு பொருந்தும் வகையில் மிகப் பரந்த கடல்வெளியில் நீண்டு நெடியதாய் அமைந்திருப்பதோடு யாழ். குடாநாட்டிலிருந்து நெடுந்தொலைவில் காணப் படுகின்றது. இலங்கையிலுள்ள தீவுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. அந்தவகையில் நெடுந்தீவில் இறங்குதுறையிலிருந்து கிழக்காக சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும் பழமை வாய்ந்த பொக்கிசமே இப் பெருக்க மரமாகும்.

இந்த மரமானது பலநூறு வருடகால பழமை வாய்ந்ததாகக் கூறப்படுகின்றது. இதனை பாவோபாப் என்றும் அழைப்பார்கள். இந்தப் பெருக்க மரமானது பலம் பொருந்திய யானைகள் ஒவ்வொரு திசையிலும் தம் துதிக்கைகளை நீட்டிக் கொண்டிருப்பது போல் அழகாகக் காட்சியளிக்கின்றன. இது 5-30 மீற்றர் உயரத்துக்கு வளரக் கூடியன. 7-11 மீற்றர் விட்டம் கொண்டு அமையக் கூடியதாகவும் உள்ளன. மரத்திலுள்ள துளை வழியே உள்ளே சென்றால் குகை போன்ற அமைப்பும் காணப்படுகின்றது. இதன் அடிமரம் மிகவும் விசாலமானதாகவும் பூக்கள் வெண்மை நிறம் கொண்டவையாகவும் காய்கள் வட்ட வடிவப் பச்சை நிறம் கொண்டவையாகவும் இலைகள் ஐந்தாகப் பிரிந்து மனித விரல்களைப் போல காட்சி தருகின்றன.

மனிதனின் ஐந்து முக்கியமான நோய்களான குருதிப்பெருக்க, நரம்புத்தளர்ச்சி, அம்மை, இரத்த அழுத்தம், தொற்றுநோய் என்பவற்றைக் குணப்படுத்துவதற்கான குறியீடாகவே இதன் இலைகள், பட்டைகள், வேர்கள் அமைவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மரமானது இஸ்லாமியரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக நம்பப்படுகின்றது. அதேவேளை நெடுந்தீவில் ஆரம்பத்தில் அதிகளவு பெருக்க மரங்கள் இருந்ததாகவும் அவை ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

போர்த்துக்கேயர் காலத்தில் இப்பெருக்க மரத்தினுள் ஒளிந்திருந்தே ஆட்சியாளர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் வரலாற்று ஆதாரங்களினூடாகத் தெரிய வருகின்றது.

இந்த மரத்துக்கு ஒரு விசேட சிறப்பு உள்ளது. அதாவது, நெடுந்தீவில் இருக்கும் பெருக்க மரம் எனப்படும் இந்த மரமே யாழ். மாவட்டத்திலேயே மிகப்பெரிய சுற்றளவைக் கொண்டதாகக் காணப்படுவதோடு தென்னாசியாவின் இரண்டாவது



இ.அபினகா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

பெரிய சுற்றளவான மரமாகவும் அமைந்துள்ளது.

இந்தத் தீவின் கேந்திர முக்கியத்துவம் கருதி இந்துக் கடலின் வல்லாதிக்கத்தை நிலைநிறுத்த முனைந்த பல தேசங்களின் ஆக்கிரமிப்பாளர்களும் வியாபாரிகளும் வந்து சென்று வாழ்ந்த இடமாகக் காணப்பட்டதற்கான சான்றாகவும் வரலாறுகளை எடுத்துச் சொல்லும் மரமாகவும் விளங்குகின்றது. ஆரம்ப காலத்தில் இந்த மரத்தின் பழங்களிலுள்ள சாறு பலம் தரும் மதுபான வகையாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் மரத்தின் பட்டைகளை நாருரித்து ஆடைகள் தயாரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.



“பெருக்குப் பட்டையிலிருந்து பட்டுச் செய்து தந்தவரே... அந்தி மங்கும் நேரத்தில் வந்து அதைக் கட்டி விட்டுப் போனாலென்ன?” என்ற நாட்டுப்புறப் பாடலொன்றில் காதல் கொண்ட பெண் தனது காதலனை நோக்கி அன்போடு பாடுவதாக அமைகின்றது. இப்பாடலில் இருந்தே பெருக்க மரம் ஆடை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பலம் என்று கூறினாலே “பெருக்கு மரம் போல் இரு” என மூதாதையர் அழுத்திக் கூறுவதுண்டு. இவை அனைத்தும் பெருக்க மரத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

இந்தப் பெருக்க மரமமானது தனது உடற்பகுதியில் சுமார் ஒரு லட்சத்து இருபதாயிரம் லீற்றர் நீரைச் சேமித்து வைக்கக் கூடியது. இந்த இசைவாக்கமானது கடுமையான வறட்சியைத் தாங்குவதற்காகக் காணப்படுவதோடு நம் முன்னோர்கள் வறட்சியான தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவிய காலப் பகுதிகளில் மரத்தின் வேர்களைப் பிடித்து சாற்றை எடுத்துக் குடித்து வந்துள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

நீண்டகால வரலாற்றைக் கொண்ட இந்தப் பெருக்க மரத்தில் வருடத்தின் 9 மாதங்கள் இலைகளே இருக்காது. இதனால் மரத்தைத் தலைகீழாக நட்டு வைத்தது போன்ற தோற்றத்தில் இருக்கும். ஆரம்ப காலத்தில் அரேபியர்கள் ஆபிரிக்கத் தேசங்களிலிருந்து தங்களுடைய குதிரைகளுக்கு உணவு மற்றும் மருந்துகளைக் கொடுப்பதற்காக இவ்வாறான மரத்தைப் பயிரிட்டிருக்கின்றார்கள் எனவும் அறிய முடிகின்றது.

காலனித்துவக் காலத்தில் அடையாளமாக நிற்கும் இந்த மரம் ஓர் இயற்கை மரபுரிமையாகப் பாதுகாப்பது முக்கியமானதாகும். ஆரம்பத்தில் கவனிக்கப்படாது காணப்பட்ட இப்பெருக்க மரம் நெடுந்தீவுக்கான சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பினாலும் தொன்மங்கள் பாதுகாத்தல் சட்டத்தாலும் நெடுந்தீவு பிரதேச சபையால் நிதி ஒதுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

எனினும் வரலாற்று உண்மைகளை பகிர்கின்ற இம்மரத்தில் பெயர்கள் எழுதியும் பட்டைகள் மீது கிறுக்கியும் மக்கள் விளையாடியிருப்பது கவலைக்குரிய விடயமாகும். எனவே எமது வரலாற்றுத் தொன்மங்களின் சரியான புரிதல்களை அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பு செய்வதே எமது கடமையாகும்.



# புதுக்குடியிருப்பில் மாத்திரம் 1,200 மாற்றுத் திறனாளிகள்!

## எழுகை மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் தகவல்

(த.சுபேசன்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள 19 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி 1200 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர் என்று எழுகை மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் ரூபன் தகவல் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு, உடையார்கட்டு கிராம சேவகர் பிரிவில், தாயக உறவுகளுக்கு கைகொடுக்கும் இலக்கியா தென்றல் அமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் எதனால் இவ்வாறு ஆனார்கள் என்று இங்குள்ள அனைவருக்கும் தெரியும். 'தாயக உறவுகளுக்கு கைகொடுக்கும் இலக்கியா தென்றல் அமைப்பின் நிறுவனர் தனுசும் இதனை நன்கு அறிந்தவர். எமது மண்ணின் வடுக்களையும், துன்பங்களையும், துயரங்களையும் அறிந்தவர்கள் பலர் புலம்பெயர் தேசங்களிலிருந்து இவ்வாறான உதவிகளை முன்னெடுக்கின்றார்கள்.

தாயக மக்களின் நிலை உணர்ந்து உதவுபவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். முல்லைத்தீவில் பல மாற்றுத்திறனாளிகள் உள்ளபோதிலும், அவர்கள் அனைவருக்கும் ஒருமித்து உதவி வழங்க முடியாத நிலைமையில்தான் நாம் இருக்கின்றோம். இருப்பினும், உடையார்கட்டு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 130 மாற்றுத் திறனாளிகளுக்கும் இலக்கியா தென்றல் அமைப்பு ஒருமித்து உதவித் திட்டம் வழங்கியுள்ளது. அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்றார்.





# கெக்கிராவ பிள்ளையார் ஆலயத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருவெம்பா!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், அநுராதபுரம் மாவட்டம் கெக்கிராவ பிரதேச நிர்வாகப் பகுதியில் அமைந்துள்ள நேயகம பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பா கால விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது. பெரும்பான்மை இன மக்கள் வாழும்



இந்தப் பிரதேசத்தில் குறிக்கப்பட்ட சைவ மக்களின் வழிபாட்டுக்காக இந்த ஆலயம் சந்நிதியான் ஆச்சிரமத்தால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# முல்லையில் காணியற்றோருக்கு மார்ச் மாதத்துக்கு முன்னர் காணி!

## கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவில் காணியற்றோருக்கு மார்ச் மாதத்துக்கு முன்னர் காணிகள் வழங்கப்படும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

காணியற்றோருக்கு விரைவில் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்ற ரவிகரன் எம்.பியின் கோரிக்கையை அடுத்து பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 பேருக்கு குடியிருப்பதற்கு காணிகள் இல்லை என்று தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், காணியற்றோருக்கு விரைவில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் இதற்குப் பதிலளித்த கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் காணிக் கச்சேரிகளை நடத்தி காணியற்றோருக்கு காணிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. குறித்த கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 பேருக்கு காணிகள் இல்லை. எனவே காணி அற்றவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், புதுக்குடியிருப்பில் 1500 குடும்பங்களுக்குக் காணிகள் இல்லை. இந்த நிலையில் கூடிய விரைவில் புதுக்குடியிருப்பு பிரதே செயலர் பிரிவுக்கு உட்பட்ட காணியற்றோருக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் காணியற்றோருக்கு காணிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். அதற்கமைய துணுக்காய் மாந்தை, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இதேவேளை, கரைதுறைப்பற்று பிரதேசத்திலும் 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணிகளின்றி இருப்பதாக பிரதேச செயலகத் தரவுகளின் மூலம் அறியக்கூடியதாகவிருக்கின்றது.

எனவே காணிகளுக்காக விண்ணப்பித்துள்ள எமது மக்களுக்கு விரைவில் காணிகளை வழங்குவதற்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு காணிகளற்ற குடும்பங்களுக்கு காணிகளை வழங்கத் தவறினால், காணிகளற்ற மக்களுடன் இணைந்து பிரதேச செயலகங்களை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கும். எனவே விரைவாக குடியிருப்பதற்கு காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு விரைவில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்று ரவிகரன் எம்.பி. தெரிவித்தார்.





# கர்நாடகாவில் பஸ் மீது லொறி மோதி விபத்து

## தீயில் கருகி 11 பேர் உயிரிழப்பு

கர்நாடக மாநிலம் சித்ரதுர்கா மாவட்டத்தில் இன்று அதிகாலை படுக்கை வசதியுடன் கூடிய சொகுசு பஸ் மீது எதிர்புறம் வந்த லொறி மோதியது. இந்த விபத்தை தொடர்ந்து பஸ் தீ பற்றியது. இதில் சுமார் 11 பேர் உடல் கருகி உயிரிழந்தனர் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து பெங்களூரை மும்பை மற்றும் புனே உடன் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை 48 இல் ஹிரியூர் அருகே நிகழ்ந்துள்ளது. 32 பயணிகளுடன் கோகர்ணாவுக்கு அந்தப் பஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்திசையில் வந்த லொறி கட்டுப்பாட்டை இழந்து, தடுப்புக் கட்டையை உடைத்துக்கொண்டு பஸ் மீது வேகமாக வந்து மோதியது.

இதையடுத்து தீ பரவியது. இதில் உயிரிழந்தவர்களில் லொறி சாரதி, லொறியின் நடத்துனர் மற்றும் பஸ்ஸில் இருந்தவர்களும் அடங்குகின்றனர். இதை பொலிஸ் அதிகாரி ரவிகாந்த் கவுடா உறுதி செய்துள்ளார்.

முதற்கட்ட விசாரணையில் லொறி சாரதியின் கவனக்குறைவு இந்த விபத்துக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

“தடுப்புக் கட்டையை உடைத்துக் கொண்டு லொறி எங்கள் பஸ்ஸ/க்கு எதிரே வந்தது. அப்போது நான் பஸ்ஸை 60 - 70 கிலோ மீட்டர் வேகத்தில் இயக்கினேன். மோதலை தடுக்க முயற்சித்தேன். ஆனால், லொறி வேகமாக வந்த காரணத்தால் அது முடியாமல் போனது” என பஸ்ஸின் சாரதி தெரிவித்துள்ளார். தற்போது அவர் சிகிச்சையில் உள்ளார்.

விபத்து ஏற்பட்ட இடத்தில் மீட்பு பணிகள் நடந்து வருகிறது. காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, கர்நாடக முதல்வர் சித்தராமையா, மத்திய அமைச்சர் குமாரசாமி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.






# ‘சமுத்ர பிரதாப்’ மாசு கட்டுப்பாட்டு கப்பல் கடலோரக் காவல்படையில் இணைந்தது

மாசு கட்டுப்பாட்டு கப்பல் சமுத்ர பிரதாப் கடலோர காவல்படையில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்திய கடலோர காவல் படைக் காக கோவா ஷிப்யார்ட் நிறுவனம் ‘சமுத்ர பிரதாப்’ என்ற மாசு கட்டுப்பாட்டு கப்பலை உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கியுள்ளது.

இதுபோன்ற கப்பல் இந்தியாவில் தயாரிக்கப்படுவது இதுவே முதல் முறை. இந்திய கடலோர பகுதிகளில் ஏற்படும் மாசுவை அகற்றுவதற்காக பிரத்யேகமாக இந்த கப்பல் உரு வாக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் ஆயில் பிங்கர் பிரின் டிங் இயந்திரம், ரசாயன கண்டு பிடிப்பு கருவிகள், தீயணைப்பு கருவி கள் மற்றும் மாசுவை அகற்றும் இதர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

# நாம் செயலிழந்த சமூகமாக மாறிக்கொண்டிருக்கிறோம்

## ராகுல் காந்தி விமர்சனம்

பொருளாதாரம் மட்டுமல்ல செய லிழந்த சமூகமாகவும் மாறிக்கொண் டிருக்கிறோம் என கிரஸ் மூத்த தலை வர் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ராகுல் காந்தி தனது எக்ஸ் தளத்தில் நேற்று வெளியிட்டுள்ள பதிவில்,

“உன்னாவ் பெண்ணை சீரழித்த குற்றவாளிக்கு (முன்னாள் பா.ஜ.க. எம். எல்.ஏ. செங்கர்) பிணை வழங்கப்பட்டி ருப்பது மிகவும் ஏமாற்றமளிக்கிறது. குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண் மீண்டும் மீண்டும் துன்புறுத்தப்பட்டு, அச்சத்தின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது பிணை வழங்கப்பட்டுள்ளது.

இது என்ன வகையான நீதி? நாம் ஒரு செயலிழந்த பொருளாதாரமாக மட்டும் மாறவில்லை. இதுபோன்ற மனிதாபிமானமற்ற சம்பவங்களால் நாம் ஒரு செயலிழந்த சமூகமாகவும் மாறிக்கொண்டிருக்கிறோம்.



ஜனநாயகத்தில், மாற்றுக்குரல் எழுப்புவது உரிமை. அதை அடக்குவது குற்றம். பாதிக்கப்பட்டவருக்கு மரியாதை யும், பாதுகாப்பும், நீதியும் கிடைக்க வேண்டுமே தவிர கையறு நிலை, பயம் மற்றும் அநீதி அல்ல.

குல்தீப் சிங் செங்கருக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய பிணைக்கு எதி ராக டில்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட பாலியல் வன்கொடுமையால் பாதிக் கப்பட்ட அந்தப் பெண்ணை மரியா தையுடன் நடத்த வேண்டும். அவருக்கு அநீதியும் அச்சமும் ஏற்படுத்து வதற்குப் பதிலாக நீதி உறுதி செய்யப் பட வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 30 இந்தியர்கள் அமெரிக்க எல்லைப் பாதுகாப்புத் துறையால் கைது



அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 30 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்புத் துறை (சி.பி.பி) சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கலிபோர்னியாவின் எல் சென்ட்ரோ செக்டாரில் உள்ள எல்லை ரோந்துப் படையினர், குடியேற்ற சோதனைச் சாவடிகளில் வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சோதனையின்போது சட்டவிரோதமாகக் குடியேறியதுடன் வணிக ரீதியான ஓட்டுநர் உரிமம் வைத்துக் கொண்டு லொறி ஓட்டி வந்த 49 பேரை கைது செய்துள்ளனர். இதில் 30 பேர் இந்தியர்கள் ஆவர். மற்றவர்கள் எல் சல்வடார், சீனா, எரித்ரியா, ஹைதி, ஹோண்டுராஸ், மெக்சிகோ, ரஷ்யா, சோமாலியா, துருக்கி மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

31 பேர் வைத்திருந்த உரிமங்கள் கலிபோர்னியாவில் வழங்கப்பட்டுள்ளன. மற்ற உரிமங்கள் புளோரிடா, இல்லினாய்ஸ், இண்டியானா, ஓஹியோ, மேரிலேண்ட், மின்னசோட்டா, நியூஜெர்சி, நியூயார்க், பென்சில்வேனியா மற்றும் வொஷிங்டனில் வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பெத்லஹேமில் 2 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் நத்தார் பண்டிகைக் கொண்டாட்டம்



காசா பகுதியில் நிலவும் தற்காலிக போர்நிறுத்தத்திற்கு மத்தியில், மேற்கு கரையில் உள்ள இயேசு கிறிஸ்துவின் பிறந்த இடமான பெத்லஹேமில் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் நத்தார் கொண்டாட்டங்கள் இடம்பெற்றுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடும் குளிரிலும் தற்காலிக கூடாரங்களில் தங்கியிருக்கும் லட்சக்கணக்கான காசா மக்களுக்கு மத்தியில், இந்த கொண்டாட்டங்கள் ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

ஜெருசலேமின் லத்தீன் தேவாலயத்தின் பேராயர் கர்தினால் பியர்பாட்டிஸ்டா பிஸாபல்லா, ஜெருசலேமிலிருந்து பெத்லஹேம் நோக்கிப் பாரம்பரிய ஊர்வலத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

அண்மையில் காசாவிலுள்ள கத்தோலிக்க திருச்சபைக்குச் சென்று வந்த அவர், அங்கிருக்கும் கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்த்துக்களையும், அவர்கள் மீண்டும் வாழ்வைக் கட்டியெழுப்பக் கொண்டுள்ள உறுதியையும் பகிர்ந்து கொண்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முடங்கிக்கிடந்த பெத்லஹேமின் பொருளாதாரம், இந்த மீள் கொண்டாட்டங்கள் மூலம் உயிர் பெறத் தொடங்கியுள்ளது.

பெத்லஹேமின் 85 சதவீத குடும்பங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுற்றுலாத் துறையையே நம்பியுள்ளன.

ஹோட்டல் உரிமையாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், கடைக்காரர்கள் மற்றும் வாகன சாரதிகள் ஆகியோர் போர்க்காலத்தினால் இழந்த தமது வாழ்வாதாரத்தை மீட்க ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இஸ்ரேலினால் ரத்து செய்யப்பட்ட வேலை அனுமதிப் பத்திரங்கள் மற்றும் பாலஸ்தீன அதிகார சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பகுதி நேரச் சம்பளம் போன்ற சவால்களுக்கு மத்தியிலும், இந்த நத்தார் கொண்டாட்டங்கள் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

பெத்லஹேம் முதல்வர் மாஹர் நிக்கோலா கனாவதி கருத்துத் தெரிவிக்கையில்,

"இரண்டு ஆண்டுகால மௌனத்திற்குப் பிறகு, நத்தார் உணர்வை மீண்டும் எரியூட்டியுள்ளோம். பெத்லஹேம் மக்களுக்கு ஒரு சிறந்த நாளை நோக்கிய நம்பிக்கை தேவைப்பட்டது. பாலஸ்தீன மக்கள் அமைதிக்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் வாழ்க்கையை நேசிக்கிறார்கள் என்பதையும் உலகுக்குச் சொல்ல விரும்புகிறோம்." – என்கிறார்.

மேலும், பெத்லஹேம் தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும், சுற்றுலாப் பயணிகளை வரவேற்க விருந்தகங்கள் தயாராக உள்ளதாகவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பக்கங்கள் - 02

கனடா முரசு

வியாழக்கிழமை 25/12/2025

## கனடாவில் மதுபானங்களின் விலைகளில் ஏற்படும் மாற்றம்




C2▶




# கனடியர்கள் விடுமுறை காலத்தில் கூடுதல் பணத்தைச் செலவிட்டனர்

### புதிய அறிக்கையில் தகவல்

இந்த விடுமுறை காலத்தில் கனடியர்கள் கடந்த ஆண்டை விட அதிகமாக செலவிட்டுள்ளனர் என புதிய அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

டிஜிட்டல் கட்டண சேவை நிறுவனம் வீசா கனடா நிறுவனம் வெளியிட்ட ஆரம்ப தரவுகளின் படி, பணம், காசோலை உள்ளிட்ட அனைத்து கட்டண முறைகளையும் சேர்த்து, விடுமுறை கால சில்லறை விற்பனைச் செலவுகள் ஆண்டுக்கு ஆண்டு 4.4 சதவீதம் உயர்ந்துள்ளன.

இந்த அறிக்கை பணவீக்கத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

C2▶

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் 26 கிலோ கோகெய்ன் மீட்பு





கொலம்பியாவிலிருந்து குளிரூட்டப்பட்ட பழங்கள் ஏற்றிச் சென்ற கண்டெய்னரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 26 கிலோவிற்கும் அதிகமான கோகெயினை பறிமுதல் செய்துள்ளதாக கனடா எல்லை சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ட்சாவாசன் கண்டெய்னர் பரிசோதனை நிலையத்தில் இந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

குளிரூட்டப்பட்ட பழங்கள் அடங்கியது என அறிவிக்கப்பட்டிருந்த அந்த கண்டெய்னரை சோதனையிட்ட எல்லை அதிகாரிகள், போதைப்பொருள் கண்டறியும் நாய்களின் உதவியுடன், கண்டெய்னரின் மேல்பகுதி பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 23 கட்டிகளான கோகெயினை கண்டுபிடித்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள் தற்போது கனடிய பொலிஸாரின் போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கனடிய எல்லை சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் ஜனவரி முதல் ஒக்டோபர் வரை காலப்பகுதியில், கனடிய எல்லை சேவை நிறுவன அதிகாரிகள் 10,000க்கும் அதிகமான போதைப்பொருள் பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும், அதில் 700 கிலோவிற்கும் மேற்பட்ட கோகெயின் அடங்கும் எனவும் நிறுவனம் கூறியுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் கனடாவின் எல்லைகளை தொடர்ந்து சோதித்து வருவதாக கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

# கனடாவில் தொலைத்தொடர்பு கோபுரத்தை சேதப்படுத்திய நபர்கள் குறித்து விசாரணை




கனடாவின் அல்பெர்டா மாகாணம், டேஸ்லாந்து நகருக்கு அருகே அமைந்துள்ள டெலஸ் தொலைத்தொடர்பு கோபுரம் வார இறுதியில் கடுமையாக சேதப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

ரேஞ்ச் ரோடு 161 பகுதியில் உள்ள டெலஸ் கோபுரம் அருகே சம்பவம் நடந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

டிசம்பர் 21 அன்று டேஸ்லாந்தில் உள்ள எங்கள் தொலைத்தொடர்பு கோபுரம் கடுமையாக சேதப்படுத்தப்பட்டு இடிந்து விழுந்தது என டெலஸ் நிறுவனத்தின் பிரதிநிதி மார்டின் நுயென் தெரிவித்துள்ளார்.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள சில டெலஸ் வாடிக்கையாளர்களின் வயர்லெஸ் சேவைகள் பாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இணையம், டிவி மற்றும் வீட்டுத் தொலைபேசி சேவைகள் பாதிக்கப்படவில்லை அவசர 911 சேவைகள் மற்ற தொலைத்தொடர்பு நிறுவனங்களின் மூலம் தொடர்ந்து செயல்பட்டதாகவும் டெலஸ் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவில் மதுபானங்களின் விலைகளில் ஏற்படும் மாற்றம்




புதிய ஆண்டில் ஒன்டாரியோ மாகாணத்தில் சில மதுபானங்களின் விலைகள் உயரக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்தில் மதுபான விற்பனையை விரிவாக்கி, நவீனப்படுத்தும் நோக்கில் முதல்வர் டக் ஃபோர்ட் அரசு கொண்டு வந்துள்ள பல மாற்றங்கள், 2026 வரை படிப்படியாக அமுல்படுத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், பீர், வைன், கூலர்கள் போன்றவை தற்போது சில மளிகைக் கடைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

அதேநேரத்தில், தி பீர் ஸ்டோர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன், காலியான பாட்டில்கள் மற்றும் கேன்கள் திரும்பப் பெறும் முறையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இந்த விரிவாக்கம் அறிவிக்கப்பட்டபோது, LCBO (Liquor Control Board of Ontario) விலிருந்து வாங்கும் அனைத்து விற்பனையாளர்களுக்கும் 10 வீதம் மொத்த விலை தள்ளுபடி வழங்கப்படும் என அரசு தெரிவித்தது.

பின்னர், அமெரிக்க வரி (U.S. tariffs) தாக்கத்திலிருந்து பார்கள், உணவகங்கள், மளிகைக் கடைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில், இந்த தள்ளுபடி 15 வீதமாக தற்காலிகமாக உயர்த்தப்பட்டது.

ஆனால், இந்த கூடுதல் தள்ளுபடி டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இதனால், ஜனவரி 1 முதல் பல வணிகங்கள் அதிகரித்த செலவுகளை நுகர்வோர் மீது சுமத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என தொழில் துறையினர் எச்சரிக்கின்றனர்.

## கனடியர்கள்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த விடுமுறை காலச் செலவுகளில், 88 சதவீதம் நேரடி கடைகளில் நடைபெற்றுள்ளதுடன், 12 சதவீதம் ஒன்லைன் கொள்வனவு இடம்பெற்றுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு கனடியர்கள் ஆடைகள் மற்றும் அணிகலன்களுக்கு அதிகமாக செலவிட்டுள்ளனர் என அறிக்கை தெரிவிக்கிறது.

மேலும், ஒரே இடத்தில் பல பொருள்கள் கிடைக்கும் one-stop shop கடைகள், வசதிக்காக வாங்கும் நுகர்வோரின் முதன்மை தேர்வாக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடுமுறை காலம், நுகர்வோரின் வாங்கும் பழக்கத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையை குறிக்கிறது என வீசா நிறுவனத்தின் தலைமை பொருளாதார நிபுணர் வேன் பெஸ்ட் குறிப்பிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், பொருள்களை கண்டறிதல், விலைகளை ஒப்பிடுதல் மற்றும் சலுகைகளுடன் நுகர்வோர் தொடர்பு கொள்ளும் முறைகளில் அதிகமாக தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன் விளைவாக, கனடியர்கள் மேலும் விழிப்புணர்வுடனும் திட்டமிட்ட முறையிலும் செலவு செய்யும் நுகர்வோர்களாக மாறி வருகின்றனர் எனவும் தங்களின் பணத்திற்கு அதிக மதிப்பு கிடைக்குமாறு கவனம் செலுத்தி வாங்குகின்றனர் என்றும் வேன் பெஸ்ட் தெரிவித்துள்ளார்.